**ஒதுக்கீட்டுத் தலைப்பு 257 - மாவட்ட செயலகம் களுத்துறை**
**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2011 ஆம் ஆண்டு**

---

## 1.1 மாவட்ட செயலகங்களின் பிரதான செயற்பணிகள்

---

(அ) வறுமையை ஒழிப்பதற்கான வழிவகுத்தல்

(ஆ) தர்தல் தொடர்புறுத்தல் பணிகள்

(இ) அபிவிருத்திச் செயற்திட்டங்களை திட்டமிடலும் மேற்பார்வை செய்தலும்.

(ஈ) அனர்த்த நிவாரணச் செயற்திட்டங்களை மற்றும் புனர்நிர்மாணச் செயற்திட்டங்களை நிர்வகித்தல்

(உ) மாவட்டச் செயற்திட்ட நிர்வாகமும் வழிகாட்டலும்

(ஊ) வருமானங்களைச் சேகரித்தல்.

## 1.2 மாவட்ட செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள்

---

(அ) களுத்துறை

(ஆ) பாணந்துறை

(இ) பண்டாரகம

(ஈ) ஹொரணை

(உ) புலத்சிங்கள

(ஊ) தொடங்கொடை

(எ) பேருவளை

(ஏ) மதுகம

(ஐ) அகலவத்த

(ஒ) வலல்லாவிட்ட

(ஓ) பாலிந்தநுவர

(ஔ) மதுராவெல

(க) மில்லனிய

(கா) இங்கிரிய

## 1.3 கணக்காய்வின் நோக்கெல்லை

களுத்துறை மாவட்ட செயலகத்தின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணைக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2013 பெப்ரவரி 21 ஆந் திகதி மாவட்டச் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணைக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணைக்கக் கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை மேற்கொள்ளக்கூடியவகையில் தயாரிக்கப்பட்டிருந்தது.

## 1.4 கணக்குகள் மற்றும் இணைக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணைக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக்கணக்கு

#### (அ) மொத்த ஏற்பாடுகள் மற்றும் செலவுகள்

களுத்துறை மாவட்ட செயலகத்திற்காக வழங்கப்பட்டிருந்த மொத்தத் தேறிய ஏற்பாடு ரூபா 531,650,000 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 527,482,119 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் தேறிய சேமிப்பு ரூபா 4,167,881 ஆக இருந்ததுடன் அது மொத்த தேறிய ஏற்பாட்டில் 0.78 சதவீதத்தினைக் கொண்டிருந்தது. விபரம் பின்வருமறு.

| செலவு | மதிப்பிடப்பட்ட நிதி ஏற்பாடு | தேறிய நிதி ஏற்பாடு | 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சேமிப்பு | சேமிப்பு தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| மீண்டுவருபவை | 453,600,000 | 466,600,000 | 3,089,415 | 0.66 |
| மூலதனம் | 65,050,000 | 65,050,000 | 1,078,466 | 1.66 |
| மொத்தம் | 518,650,000 | 531,650,000 | 4,167,881 | |

#### (ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்

பல்வேறு செயற்பாடுகளுக்காக 18 அமைச்சுக்களினால் ரூபா 2,335 மில்லியன் நிதி ஏற்பாடும் 14 திணைக்களங்களினால் ரூபா 1,423 மில்லியன் நிதி ஏற்பாடும் ஆக ரூபா 3,758 மில்லியன் கூட்டுமொத்தமான நிதி ஏற்பாடு மாவட்ட செயலகத்திற்கு கிடைத்திருந்ததுடன் இதில் முறையே ரூபா 1,680 மில்லியன் மற்றும் ரூபா 1,380 மில்லியன் ஆக ரூபா 3,060 மில்லியன் கூட்டுமொத்த தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. ஆகவே ரூபா 698 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்தது. 2 அமைச்சுக்களினால் அனுப்பிவைக்கப்பட்டிருந்த ரூபா 424,602 கூட்டுமொத்த தொகை மற்றும் 2 திணைக்களங்களினால் அனுப்பிவைக்கப்பட்டிருந்த ரூபா 110,000 கூட்டுமொத்தமான நிதி ஏற்பாடுகளிலிருந்து எந்த பயன்பாடும் செய்யப்பட்டிருக்காததுடன் மேலும் ஒரு திணைக்களத்தினால் அனுப்பிவைக்கப்பட்ட ரூபா 6,526,580 தொகையான

நிதி ஏற்பாட்டினை ரூபா 44,843 ஆல் மிகைத்து ரூபா 6,571,423 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட எல்லைகள்**

25701 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் அனுமதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதிகளும் கீழே தரப்படுகின்றன.

| செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடி யானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானவை | உச்ச எல்லை | உள்ளபடி யானவை |
| ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 58,875,000 | 54,195,290 | 35,000,000 | 57,381,095 | 270,000,000 | 216,548,182 |

## 2.3 கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் களுத்துறை மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இங்கே (அ) இலிருந்து (உ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 2.5 இலிருந்து 2.10 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்படுகின்றது.

### (அ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

மாவட்ட செயலகத்தினால் கீழே காட்டப்பட்டுள்ள பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேடுகளின் வகை | உரிய நிதிப்பிரமாணம் | அவதானிப்பு |
|---|---|---|
| நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு | நி.பி 110 | நட்டங்கள் சேதங்கள் பதிவேடு முறைப்படியும் நாளது வரையாகவும் பேணப்பட்டிருக்க வில்லை. |
| கணனி மற்றும் மென்பொருட்கள் தொடர்பான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபம் | பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

**(ஆ) கூட்டிணைந்த திட்டம்**

அனைத்து அமைச்சு செயலாளர்கள், மாகாண சபை பிரதான செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள், மாவட்ட செயலாளர்கள், மாகாண உள்ளுராட்சி தலைவர்கள் ஆகியோருக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதி பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிலிருந்து எதிர்காலத்தில் ஆகக் குறைந்தது 03 ஆண்டுகளுக்காக வருட ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய கூட்டிணைந்த திட்டம் மாவட்ட செயலகத்தினால் 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

மேலே பந்தி (ஆ) இல் குறிப்பிடப்பட்ட பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்திற்கு இணங்க 2010 ஆம் ஆண்டு மற்றும் அதற்குப் பின்னைய செயல் நடவடிக்கைத் திட்டம் மாவட்ட செயலகத்தினால் தயாரிக்கப்படவேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

மேலே பந்தி (ஆ) இல் குறிப்பிடப்பட்ட அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க பொது நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மாவட்ட செயலகத்தினால்

தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை 2012 யூலை 23 ஆந் திகதியே பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருந்தது.

**(உ) வருடாந்த கொள்வனவுத் திட்டம்**

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2011 மே 04 ஆம் திகதியே தயாரிக்கப்பட்டிருந்தது.

**(ஊ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் தொடர்பான இணக்கக் கூற்று**

25701 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 2,780,626 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் அம்மீதிகளில் 1 ஆண்டிங்கு மேல் 2 ஆண்டுகளிற்கு குறைய ரூபா 423,167 தொகையும் 3 ஆண்டுகளிற்கு மேல் ரூபா 105,623 தொகையும் 2013 ஏப்ரல் வரை நிலுவையாகக் காணப்பட்டது.

## 2.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

**(அ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

வீட்டுப்பாவனைப் பொருட்களுடன் பழைய மாவட்ட செயலகத்தின் உத்தியோகபூர்வ இல்லம் மற்றும் அதற்குரிய காணி 2006 ஆம் ஆண்டிலிருந்து பயன்படுத்தப்படாது காணப்பட்டதுடன் 2010 ஆம் ஆண்டின் போது நிருவாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சிடமிருந்து பயிற்சிப் பிரிவினைத் தோற்றுவிப்பதற்காக கிடைத்த நிதி ஏற்பாட்டின் பேரில் ரூபா 1,159,501 செலவில் பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தும் 2012 செப்தெம்பர் மாதம் வரை அது விளைவற்றுக் காணப்பட்டது.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வினை நடாத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மாவட்ட செயலகத்தில் காணப்படும் பல்வேறு பிரிவுகளுக்காக தனித்தனியாக பொருள் இருப்பு பதிவேடுகள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) பிரதான களஞ்சியத்திலுள்ள துறைரீதியான பொருள் இருப்புப் பதிவேட்டினை அடிப்படையாகக் கொண்டு வருடாந்த பொருள் மெய்மையாய்வு இடம்பெற்றிருந்தது.

(iii) 2008 ஆம் ஆண்டின் போது ரூபா 40,500 செலவு செய்து "சயனஸ் லேன்ட்" நிறுவனத்தின் மூலம் நிலையான சொத்துக் கட்டுப்பாட்டு கணனி நிகழ்ச்சித் திட்டம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தும் 2011 ஆம் ஆண்டின் போதும் அது பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(இ) ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல்**

ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான பின்வரும் சொத்துக்கள் முறையான அங்கீகாரமின்றி மாவட்ட செயலகத்தினால் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சற்தர்ப்பங்கள் தெரிவுக் கணக்காய்வுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்டது.

**நிலையான சொத்துக்கள்**

சுனாமி அனர்த்தத்தின் போது ராடா செயற்திட்டத்தின் கீழ் 2006 ஆம் ஆண்டின் போது நகர அபிவிருத்தி மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் மூலம் வழங்கப்பட்டிருந்த 06 மோட்டார் சைக்கிள்கள் செயற்திட்டம் முடிவுற்றதன் பின்னர் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது அல்லது உரிய நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்படாது விளைவற்றுக் காணப்பட்டது.

**(ஈ) தீர்த்துவைக்கப்படாத பொறுப்புக்கள்**

மாவட்ட செயலகத்தினால் 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஒரு ஆண்டினை மிகைக்காத தீர்த்துவைக்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 2,875,922 ஆக இருந்தது.

04 செலவு விடயங்களுக்குரிய மேற்கூறிய பொறுப்புக்கள் ஒதுக்கீட்டுக் கணக்கில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.5 செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதிலுள்ள பலவீனங்கள்**

செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு பூர்த்திசெய்யாது கைவிடுதல் மற்றும் செயற்திட்டத்தின் தாமதங்கள் தொடர்பாக கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

**(அ) செயற்திட்டத்தினைப் பூர்த்திசெய்யாது கைவிடுதல்**

மாவட்ட செயலகத்தினால் பின்வரும் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தும் அச்செயற்திட்டங்கள் பூர்த்திசெய்யப்படாது கைவிடப்பட்டிருந்தன.

| செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப்பட்ட திகதி | 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலவுகள் | கைவிடப்பட்ட மைக்கான காரணம் |
|---|---|---|---|---|
| | ரூபா | | ரூபா | |
| பண்டியாவல கால்வாயை மறுசீரமைத்தல் | 742,638 | 2011.12.07 | 527,362 | காட்டப்பட்டிக்க வில்லை. |

**(ஆ) செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்**

மாவட்ட செயலகத்தினால் பின்வரும் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

| செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப்பட்ட திகதி | பூர்த்திசெய்யப்பட வேண்டிய திகதி | 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலவுகள் | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | | | ரூபா | |
| களுத்துறை வடக்கு மகளிர் சிகிச்சை நிலையத்தினை புதுப்பித்தல் | 3,262,575 | 2012.05.02 | 2011-12-31<br>2012-02-15<br>2012-08-02<br>2012-08-31 | - | வேலைகளை ஆரம்பிப்பதில் தாமதம் |

ரூபா 03 மில்லியன் மதிப்பிடப்பட்ட பெறுமதியினை மிகைத்து தொடர்ச்சியான செயற்திட்டமாகிய மேற்கூறிய செயற்திட்டத்தின் உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்ட கால எல்லை மிகைத்திருந்த போதிலும் 2012 செப்தெம்பர் 20 ஆந் திகதி வரையும் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததனால் அந்த சிகிச்சை நிலையத்திற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 582,882 பெறுமதியான பொருட்கள் வேறு இடத்தில் விளைவற்றுக் காண்பபட்டது.

**(இ) பணம் விடுவிக்கப்பட்டிருந்தும் செயல்முனனேற்றத்தினை வழங்கியிருக்காத செயற்திட்டங்கள்**

(i) கலாச்சார மற்றும் கலை நடவடிக்கைகள் அமைச்சிடமிருந்து பேருவளை பிரசே செயலகத்திற்கு கலாச்சார நிலையத்தினைப் புதுப்பிப்பதற்கு ரூபா 380,000 தொகை வழங்கப்பட்டிருந்தது. கட்டிடத்தின் கூரைக்குச் சமமான அளவுள்ள மரம் பயன்படுத்தாமை, மரங்களில் பாதுகாப்பு வர்ணம் பூசப்படாமை மற்றும் மழை நீர் வடிந்தோடி, குழாய் முதலியன ஈடுபடுத்தாதிருந்தும் அனைத்து கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அக்குறைபாடுகளை 2012 ஆகஸ்ட் வரை பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2012 ஆம் ஆண்டில் தொடர்ச்சியாகக் காணப்பட்ட 2011 கமநெகும செயற்திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மூலம் தொடங்கொட பிரதேச செயலகப் பிரிவில் பொலஸ்ஸகம மகப்பேற்று சிகிச்சை நிலைய கட்டிடத்திற்குத் தேவையான உபகரணங்களை வழங்குவதற்கான ரூபா 569,662 தொகையான நிதி ஏற்பாட்டில் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் ஒப்படைக்கப்படாது அலுவலக களஞ்சியத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

## 2.6 வங்கி கணக்குச் செயற்பாட்டின் குறைபாடுகள்

### (அ) செம்மையாக்கப்பட வேண்டிய மீதி

மாவட்ட செயலகம் மற்றும் 14 பிரதேச செயலகங்களினால் 2011 திசெம்பர் மாதத்திற்காகத் தயாரிக்கப்பட்ட வங்கி கணக்கிணக்கக் கூற்றுக்களில் காட்டப்பட்ட செம்மையாக்கல்கள் தொடர்பான பகுப்பாய்வின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்ட தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| செம்மையாக்கல் தொடர்பான விபரம் | 6 மாதங்களுக்கு மேல் 1 ஆண்டிற்கு குறைய | மொத்தம் |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| வழங்கப்பட்ட ஆனால் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் | 42,272 | 42,272 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்கில் காட்டப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் 6 மாதங்களை மிகைத்த காசோலைகளின் பெறுமதி ரூபா 39,242 ஆகக் காட்டப்பட்டிருந்தும் அது ரூபா 42,272 ஆக இருக்க வேண்டுமென்பது அவதானிக்கப்பட்டது. இங்கிரிய பிரதேச செயலகத்தில் ரூபா 3,030 தொகையான 04 காசோலைகள் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல்வாங்கல்கள் முறையற்றவையாகக் காணப்பட்டன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சந்தர்ப்பங்களில் சில கீழே தரப்படுகின்றன.

(அ) பண்டாரகம பிரதேச செயலகத்தில் ரூபா 12,297,453 பெறுமதியான கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்கு கேள்விதாரர்களைத் தெரிவு செய்யும் போது தகைமைகளைப் பரீட்சித்த முறை தொடர்பான சான்றுகள் எதுவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) 2011 ஆம் ஆண்டின் போது புனரமைத்தல் மற்றும் மேம்படுத்தலுக்காக மாவட்ட செயலகத்திற்கு ரூபா 2,283,844 தொகையான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தும் அதில் 2010 ஆம் ஆண்டிற்காக ரூபா 825,875 செலவு செய்யப்பட்டிருந்தது. 2010 ஆம் ஆண்டின் போது அச்செயற்பாட்டிற்கு நிதி ஏற்பாடு இல்லாமல் பொறுப்புக்கள் இடம்பெற்றிருந்தன.

## 2.8 மனிதவளங்கள் முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 01 | 01 | - |
| (ii) | மூன்றாம் மட்டம் | 63 | 60 | 03 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 1,212 | 1,171 | 41 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 143 | 143 | - |

| | | | |
|---|---|---|---|
| | ----------- | -------- | ---------- |
| மொத்தம் | 1,419 | 1,375 | 44 |
| | ==== | ===== | ===== |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 44 வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியாதிருந்தது.

## 2.9 உள்ளகக் கட்டுப்பாடு

### கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களை அமுல்படுத்தல்

2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009/(1) ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 6 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஆகக் குறைந்தது காலாண்டிற்கு ஒரு தடவை கூட்டப்பட வேண்டிய போதிலும் 2011 ஆம் ஆண்டிற்காக ஒரு தடவை மாத்திரம் கூட்டப்பட்டிருந்தது.